# புவியெங்கும் வாழ்த்துமழை பொழிகவே!

ஆலவிதை போல்ஊன்றி
அருங்கழகம் வளர்த்தெடுத்துக்
காலகாலம் ஆனாலும்
கனல்வான்நீர் கடல்காற்றாய்ச்
சாலவே விளங்குபவர்
தமிழர்கண் திறந்தவர்
நூலறிவும் நுண்ணறிவும்
நூறுஇமயம் ஆனவர்
வாலறிவன் அண்ணாவின்
வழிவந்து வளர்ந்தெழுந்த
காலமெனும் பூங்காவில்
கமழுமலர் கோடியுள்
ஞாலமெலாம் பொலிபவர்,
நறுமணம் வாடாதவர்
கோலமிகு தமிழ்நாட்டின்
கொற்றத்தில் அமர்ந்தவர்
வேல்மிகு சோழன்போல்
வெற்றியைச் சுமந்தவர்!

நீண்டநாள் முதல்வராய்
நெடுந்தமிழ்
நாட்டினை
ஆண்டவர்!எப்போதும்
அமர்க்களத் தேர்தலில்
ஈண்டவர் வெற்றியே
எய்தியவர்! சிலபோது
கூண்டிலிட்ட சிங்கமாய்க்
கொற்றமின்றி இருந்தாலும்
தூண்டிலிட்ட மீனாகத்
துடிக்காமல் அலைகளைத்
தாண்டியே எழுந்தவர்
தடைகளைத் தகர்த்தவர்!

பாண்டியன் பழஞ்சேரன்
பாய்புலிச் சோழன்போல்
மீண்டவர், வெற்றியெனும்
மேல்முகடு நின்றவர்
ஆண்தகை பகுத்தறிவு
தன்மான அரிமாவாய்
மாண்பிலே திகழ்ந்தவர்
மானத்தைக் காத்தவர்!

எதிர்த்தவர்கள் அவரையிங்கு
ஏராளம், ஆனாலும்
உதிர்த்தன்றோ அவர்களை
உதறியவர்; யாரையும்
மிதித்தவர் வளரவில்லை,
மேன்மேலும் உழைத்துழைத்து
உதிரத்தைக் கொட்டியே
உயர்ந்தவர், எதிரிகளை
அதிரவிட்டார், உடனிருப்போர்
அரவணைத்து
வளரவைத்தார்!

மதியாலே வென்றவர்
மாற்றாரும் விழைந்தவர்!
சதிகளை முறியடித்துத்
தலைவராய் நின்றவர்!
புதிதாக ஒவ்வொன்றும்
புரிந்தவர், பழமையிலும்
அதிநன்மை உண்டென
அறிந்தவர், எப்போதும்
விதிவகுக்கும்
வல்லமையால்
விளைத்தவர் நன்மைகள்!

முதிய ஒரு காலத்தும்
மூளையின் செயலாற்றல்
பதித்தவர், முடிவுகளைப்



பட்டென எடுத்தவர்!
கொதித்தவர் இந்தித்தேள்
கொடுக்கினை முறித்தவர்
வதிந்தவர் தனிமையாய்
வாடியவர் வெஞ்சிறை!
குதித்தவர் இரயிலின்முன்
கொடுத்தவர் தலையினை!

நதிபோல ஓடியவர்
நாளெலாம் உழைத்தவர்
எதுவரினும் அஞ்சாமல்
இயக்கத்தைத் தாங்கியவர்
முதுகிலே குத்துவோரை
முன்பறிந்து
தாக்கியவர்
ஒதுங்காமல் தோல்வியால்
உடன்பிறப்போ டெழுந்தவர்!

பதுங்காத வேழமவர்;
பாய்கின்ற வேங்கையவர்!
கதம்பமல்ல அவரென்றும்
கார்முல்லை வான்எல்லை!
விதவிதமாய் எழுதியவர்
வித்தகமாய்ப் பேசியவர்
நித்தந்தோறும் அரசியல்வான்
நீங்காமல் ஒளிர்ந்தவர்!

பேராசிரியர்
**மா.செல்வராசன்**

சிதறாமல் கழகத்தைத்
திண்மையாய்
ஆக்கியவர்
பதறாமல் செயற்படத்
தொண்டர்களை ஊக்கியவர்
உதறாமல் கொள்கைகளை
உள்ளத்தில் தேக்கியவர்
இதனாலே இவன்முடிக்கும்
என்றாய்ந்து தூக்கியவர்
கதறாமல் எப்போதும் கடமையே
நோக்கியவர்
நொதுமலரைத் தவறாமல்
நூறியே தாக்கியவர்
பதராக ஆனோரைப்
பயமின்றி நீக்கியவர்
சதுரங்க அரசியலில்
தனித்திறனாய் ஓங்கியவர்!

இவரைப்போல் வென்றவர்
எவருமில்லை!
தவறவிட்டால் வெற்றியைத்
தழுவாமல் விட்டதில்லை!
கவலைஒரு வலையாகும்
கலங்கித்தான் வீழ்ந்தாலோ
சவலையாய் ஆகிவிடும்

சாதித்தல் ஓழிவிடும்!
தவளைகள் கத்துவதால்
தகும்இசை ஆவதில்லை
திவலைகள் முத்துப்போல
தெரிந்தாலும் நிலைப்பதில்லை
குவளைமலர் ஒருபோதும்
கோலவெழில் இழப்பதில்லை
துவளாமல் சோராமல்
தூங்காமல் தொய்யாமல்
உவந்தபடி முயன்றாலோ
உறுதியாய் முனைந்தாலோ
பவழம்போல் கழகந்தான்
பழையபடி வெல்வதுண்மை;
தவழ்வதும் கவிழ்வதும்
தனிப்பட எழுவதற்கே!

அவமானம் என்றெண்ணி
அடங்குவதால் பயனில்லை
தவறாகப் போனதெலாம்
சரியாகும் விரைவிலென்று
நுவல்கின்ற கலைஞரின்
நோக்குதான் காக்குமாம்!

குவலயம் ஆள்கின்ற
கொடிமீண்டும் ஏற்றுகின்ற
தவமாகக் கொள்ளுவோம்
தமிழொன்றால் வெல்லுவோம்
இவையாவும் கலைஞரின்
எழுச்சிதரும் பிறந்தநாள்
குவையான கருத்தாகும்
கொழுகொழு
குருத்தாகும்
சுவையான கனிவரும்
சூரியன் மீண்டெழும்!

எவராண்டால் என்னவென்று
இருந்துவிட்டால்
என்றைக்கும்
தவறாகும், எதிர்காலத்
தமிழ்நாடு தாழ்ந்துவிடும்!
உவர்நிலம் ஆகிவிடும்
உறுபயன் அற்றுவிடும்
அவலமாய்த் தமிழ்நாடு
ஆகியே இற்றுவிழும்
அவலரைக்கும் தற்குறிகள்
அளவின்றிப் பெருகிவிடும்!

கவர்ச்சியால் போனதெலாம்
கைகூட வேண்டுமெனின்
துவளாமல் முயற்சியைத்
தொடங்குவோம்
தோல்விநற்றிக்
கவலாமல் கிளர்ந்தெழு வோம்
காரணங்கள் கண்டுயர்வோம்

ஓலத்தை நிறுத்துவோம்
உட்பகை நறுக்குவோம்
காலத்தை மாற்றுவோம்
கழகத்தை ஏற்றுவோம்!

நவமான கலைஞரின்
நல்லதொரு பிறந்தநாள்
உவமானம் இல்லாத
ஒப்பற்ற சிறந்தநாள்
குவிந்தெங்கும் போற்றுவோம்
கொள்கையே வெல்கென்போம்!
செவியெலாம் இனிக்கின்ற
செம்மொழி கண்டவர்க்குப்
புவியெங்கும் வாழ்த்துமழை
பொழுதெலாம் பொழிகுவோம்!



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103ம் ஆண்டு பிறந்தநாளை முன்னிட்டு, அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி, கொங்கநல்லூரில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கு, தெற்கு மாவட்டக் கழக செயலாளர், ஏ.பி.நந்தகுமார் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி கேக் மற்றும் இனிப்பு வழங்கினார். இதில் மாவட்ட ஊராட்சி தலைவர், மு. பாபு, மத்திய ஒன்றியச் செயலாளர் ஏரிப்புதூர் பி.வெங்கடேசன், மாவட்ட கவுன்சிலர், பி.கிருஷ்ணமோன், ஊராட்சி குழு தலைவர் பாஸ்கரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் என்.பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ‘முத்தமிழின் முரசொலி’ கலைஞர் வாழ்க!!

காலத்தை வென்று தடம் பதித்த வீரம், நமது சூரியோதயம். கண்மணி காவியம் திராவிடத் திலகம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் ஜூன்3. திராவிடத் திருவிழா.

103வது அகவை, இருளை விரட்ட இயக்கமாக இயங்கிடும் உடன்பிறப்புகளுக்கு மேலும் உறுதியினை அளித்திடும் நாள். உலகெங்கும் உள்ள திராவிடத்தமிழர்கள் போற்றிக் கொண்டாடும் நாள்.

ஒவ்வொரு உணர்வுள்ள திராவிட தமிழரும், போர் வீரனாகி, அறிவாயுதம் ஏந்தி, நம் வரலாற்றுத் தலைவர் கலைஞரின் திருவுருவிற்கு மாலை அணிவித்து வணங்கி நற்பணிகள் செய்து மக்களுடன் பிறந்த நாளை வாழ்நாள் கடமையாக கொண்டாடி மகிழ்கின்றனர்.

உண்மையான உணர்வாளர்களும் ஆற்றல் மிகு அறிவு நெறியாளர்களும் முத்தமிழ் அறிஞரை போற்றிப் புகழ்வதை ஏற்றுக்கொள்ளாத தமிழின துரோகிகள், சனாதனிகள், பல்முனை தாக்குதல்களை நடத்தினாலும் அவைகளை தனது தியாகம், வீரம், அறிவு நிரம்பிய வாழ்வால் ஈடு இணையில்லா செயல் திறன்களால் தூள் தூளாக்கி அவர்களை ஓடவிட்டு தலை நிமிர்ந்து வரலாற்றில் நிலைத்த புகழுடன் குறளோவிய ஆசான் கலைஞர், வரலாறாக வாழ்கிறார்.

இன்று கழகமாக, கலைஞர் வடிவாக, தன் செயல்களால் உலகை வியக்கவைத்து, மாற்றாருக்கு திராவிடச்சிங்கமாக காட்சி தரும், நம் உயிரனைய உத்தமத்தலைவர் அண்ணன் தளபதி அவர்கள். அவருக்கே உரிய வகையில், ஒரு கட்டுரையில்,

“பாடம் படிக்க பள்ளிக்கூடம் போ…. போ….” என்று என் பெற்றோர் விரட்டிய போது, பகுத்தறிவு சுயமரியாதைப் பாடம் படிக்க பெரியாரின் பள்ளிக்கூடத்திற்கு வந்தவன் நான்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவார்கள். நானும் அப்படித்தான் படி, படி, என்று சொன்ன போது கலைஞரின் பள்ளிக்கூடத்தில் படித்தவன் நான்” என்று அறிவுப்பூர்வமாக சிந்திக்க வைத்தார்.

சரித்திரங்களின் துவக்கம், ஒன்றாக இருப்பது நம்மை பெருமையுடன் நிமிர வைக்கிறது. இனப்பகைகள் அதிர்ச்சியடைந்து சாய்வது நமக்கு மகிழ்வை தருகிறது.



**கடலூர் இள. புகழேந்தி**
தேர்தல் பணிக்குழு செயலாளர்

கலைஞர், தளபதியின் அறிவார்ந்த தாக்குதலால் அந்தக் கூட்டம் வீழ்ந்து கிடக்கிறது. அதனால்தான் இன்றும் கலைஞர் வாழ்கிறார் என தமிழ்நாடு சொல்கிறது.

“பேனாவும், நாவும் தான் எங்கள் ஆயுதங்கள்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். ஆம்! அவரின் வாழ்வுப் பயணத்தை பார்ப்போர் அறிவர். அவரின் எழுத்துப் பேசும்! பேச்சு எழுத்தாய் காலப்பதிவாகும். ஈடு இணையற்ற பன்முக ஆற்றல் கொண்ட நற்றமிழ் நாயகர் கலைஞர் அவர்கள் என்றும் விரும்புவது கொள்கைப்பூர்வமான இளைஞர்படை. தாய்மொழித் தமிழின் பாதுகாப்பு. அனைவருக்குமான சமூகநீதி. கல்வியில் மேன்மை. கருத்தாக்கத்தில் இமய உறுதி. வருங்காலம் கழக காலமாக நிலைத்திட உலகு போற்ற தமிழர் உயர்ந்திட, கழக உடன்பிறப்புகளின் உழைப்பு ஆகியவற்றை அவர் இறுதி நிமிடம் வரை விரும்பினார்.

மேலும் திராவிட இயக்க கொள்கைகளை பாமரரும் புரிந்து கொண்டு, செயல்பட வேண்டும். கடைசி தமிழனும் தமிழச்சியும் கூட சனாதனத்தை வீழ்த்திடும் வேங்கைகளாக இருந்து, ஆரியக் கூட்டத்தை விரட்டி அழித்திட அவர்களுக்கு இயக்கம் உணர்வூட்டும் இலட்சியப் பாடங்களை கற்பிக்க வேண்டுமென்றார், வீரமிகு கலைஞர் பெருமகனார். தன் வாழ்வையே அதற்காக அர்ப்பணித்தவர் .

பிறந்தநாள் நாயகர் கலைஞரின் தமிழ்ப்பற்றும், செயலாற்றல் மிக்க அவரின் துணிவையும், அவரின் பள்ளிப் பருவத்திலேயே உலகம் அறிந்து கொள்ளும் வண்ணம் பல நிகழ்வுகள் நடந்துள்ளன. அதில் முதன்மையானதாகவும் நான் கூற விரும்பும் சரித்திர பதிவு

1938ல் இந்தி எதிர்ப்பு போராட்டக் கிளர்ச்சிகள்.



நாடு முழுவதும் இராசகோபாலாச்சாரி (ராஜாஜி) யின் செயல்களை எதிர்த்து நடைபெற்றன.

தந்தை பெரியாரின் போர்க்கள ஆணைகள் வழிவங்களாக மாறி வெற்றிகரமாக நடந்தது.

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, நாவலர் சோமசுந்தரர் போன்ற பல தமிழறிஞர்கள் கலந்து கொண்ட முதல் இந்தி எதிர்ப்பு மாநாடு, பிப்ரவரி 27ல். காஞ்சியில் நடைபெற்றது.

அதன் விளைவுகள், தமிழ் மொழிக்காக உயிரையும் தரக் கூடிய வீரர்கள் இருக்கிறார்கள் என்பதை நாடு தெரிந்து கொண்டது. தமிழறிஞர்களும் ஒன்று திரண்டெழ தந்தை பெரியார் வேண்டுகோள் பயனளித்தது.

இப்படிப்பட்ட போர்க்களத்தில் தமிழ் நாட்டையே ஆச்சரியப்படவைத்த தமிழ் வீரராக, ஒரு பள்ளி மாணவர் தன் நண்பர்களை திரட்டி “தமிழ் வாழ்க!” என முழக்கமிட வைத்து இந்தி எதிர்ப்பு ஊர்வலமாக சென்று போராட்டத்தை நடத்தினார். அவர் தானே எழுதி தயாரித்த துண்டறிக்கைகளை மக்களிடம், மாணவர்கள் மூலம் கொடுக்க வைத்தார். “தமிழ் காக்க வாருங்கள்” என்ற குரலெழுப்பி அழைப்பு விட்டார்.

அந்த அழைப்பாளிதான் மொழிக்காக்க பல் வேறு சிறைக் கொட்டடிகளில் வதைபட்டார். வீரராகவே வெளிவந்து தொடர்ந்து போர்க்களத்தில் மொழி காக்கும் வீரராக போர்க்களங்களுக்கு தலைவராக இருந்தார். அவர்தான் எதிர்காலத்தில் தமிழ்நாட்டின் முதல்வரான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

அன்று போர்க்களத்தில் மாணவர் கோலத்தில் வீசிய இளம் புயல்தான் தலைவர் கலைஞர்.

அவரின் போராயுதங்களான எழுத்தும், பேச்சும் வீரமிகு தமிழ்நெறிமிகு பணிகளின் தொடர்ச்சி இன்றும் எழுச்சியுடன் விழிப்புணர்வுடன் உள்ளது என்றால், அது திராவிடக் கொள்கைக் குரலாக, கலைஞரின் பேராற்றலாக இன்று நமது இளைஞரணி செயலாளர் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆதாரமாகத் திகழ்கிறார்.

**“உதயக்கதிர் ஒளி**
**வெளிச்சம் நிரந்தரம்.**

**இடி இடி இடித்தால்**
**எழும்பும் ஒலி சத்தம்**
**தற்காலிகம்.”**

என்பதை உலகமறிய செய்திட, வாழ்நாள் முழுவதும்

தமிழுக்காக, தமிழர்களுக்காக, திராவிட நீதிக்காக,

தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த தியாக தீபம் கலைஞர் புகழ் வாழ்க என்று வாழ்த்தொலி எழுப்பி என்றும் தலைவர் தளபதி தலைமையில் தமிழ்நாட்டின் கம்பீரமாக நிலைத்துள்ள கலைஞரின் கொள்கைகளை பாடுவோம்.

தலைவர் தளபதி ஆணையிடுவார்.

இளைஞரணி உதயா வழிகாட்டுவார்.

கழகப் போர்ப்படை வெற்றிநடைபோடும்.

முத்தமிழறிஞரின் புகழ் வாழ்க!

தமிழ்நாட்டைக் காக்க, இடைக்கால இருட்டினை விரட்டிட

கண்மணித்தலைவர் தளபதியின் திராவிட மாடல் அரசு மீண்டும் அமைய

முத்தமிழறிஞரின் 103 வது பிறந்தநாளில் அனைவரும் உறுதியேற்போம்..